DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.223/2020

Petitioner side witness for P.W.2

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. பூர்ணசுரேஷ்** | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **16.04.2025.**

**A1 to A3 are present.**

<u>முதல்விசாரணை:–</u>

நான் கடந்த 15 வருடங்களாக தூத்துக்குடி வெள்ளைப்பட்டியில் அம்பது வீட்டு காலனியில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் கடல் தொழில் செய்து வருகிறேன். எனது பைபர் போட்டிற்கு நம்பர் எதுவும் வாங்க முயற்சிக்கவில்லை. ஆஜர் எதிரிகளைத் தெரியும். முதலில் நிற்பவர் பெயர் மகாராஜன், 2 வது நிற்பவர் பெயர் மேரி, 3 வது நிற்பவர் பெயர் சேகர்மணி. 1 வது சாட்சி ஜான்சிமேரியை எனக்கு தெரியும். இவ்வழக்கில் கொலையுண்டு இறந்துபோன சின்னத்துரையை தெரியும். சின்னத்துரை கொலை வழக்கு சம்மந்தமாக என்னதெரியும் என்று கேட்டால் தேதி வருடம் சரியாக ஞாபகமில்லை. சுமார் 4, 5 வருடங்களுக்கு முன்பாக சின்னத்துரை கடல் தவறி விழுந்து இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். அப்போது வெள்ளப்பட்டி கடற்கரை சென்று தேடினோம். அவரது உடல் கடைசிவரை கிடைத்ததா என்றால் 3 நாள் கழித்து கிடைத்தது. எங்கு ஒதுங்கியது என்று தெரியவில்லை. எனது பைபர் படகிற்கு அருகே இறந்துபோன சின்னத்துரை பைபர் படகு வைத்ததில்லை. இறந்துபோன சின்னத்துரைக்கும், எதிரிகளுக்கும் என்ன உறவு முறை என்றால் 1ம் எதிரி மகன், 2ம் எதிரி மனைவி. 3ம் எதிரி என்ன உறவு என்று தெரியவில்லை. இறந்துபோன சின்னத்துரைக்கும் எதிரிகளுக்கும் என்ன பிரச்சனை என்ன முன்விரோதம் என்று எனக்கு தெரியாது. வழக்கு சம்பவத்தை நேரடியாக எதுவும் பார்க்கவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை. இறந்துபோன சின்னத்துரை எனதுமனைவியின் தாய்மாமா ஆவார். 1,2 எதிரிகள் அவரது மகன் மற்றும் மனைவி ஆவார். இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(இந்நிலையில் சாட்சி வாக்குமூலத்திற்கு மாறுபாடாக சாட்சியமளித்ததால், அரசு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி சாட்சி பிறழ் சாட்சியாக கருதபட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன்பேரில் அனுமதிக்கப்பட்டது.)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலீசார் விசாரணையின்போது, நான் எனது போர்ட் வெள்ளப்பட்டி கடற்கரையில் மற்ற மீனவர்கள் போர்ட்டிற்கு அருகே நிப்பாட்டி வைப்பேன் என்றும், இரவு 10.00 மணியளவில் வெள்ளப்பட்டி கடற்கரையிலிருந்து மீன்பிடிக்க என்னுடன் பழையகாயலை சேர்ந்த தற்சமயம் எங்களது ஏரியாவில் குடியிருந்து வரும் சேசு என்பவரின் மகன் ஞானசேகரன் மற்றும் தருவைகுளத்தை சேர்ந்த காசிநாடார் மகன் ஜோதி மணி ஆகிய நாங்கள் மூவரும் கடலுக்கு சென்று மீன்பிடிப்பதை வழக்கமாக வைத்துள்ளோம் என்றும், அதேபோல் 06.07.2019 அன்று அதிகாலை சுமார் 1.00 மணியளவில் இறந்துபோன அந்தோணி சின்னத்துரையின் போர்ட் அருகே நிப்பாட்டி வைத்திருந்த எனது போர்ட்டை எடுத்துக்கொண்டு கடலுக்குள் செல்ல நாங்கள் தயாராகி கொண்டிருந்தபோது இறந்துபோன அந்தோணி சின்னத்துரையும், அவரது மகன்களான 1ம்எதிரி அந்தோணி மகராஜா மற்றும் அந்தோணி மார்ட்டின் ஆகியோரும் ஆயத்தமாகி கொண்டிருந்தார்கள் என்றும், சிறிது நேரத்தில் அந்தோணி சின்னத்துரையின் இளைய மகன் அந்தோணி மார்ட்டின் போர்ட்டின் பின்பகுதியில் படுத்து துாங்கிவிட்டார் என்றும், அப்போது அந்தோணி மகராஜாவும் அந்தோணி சின்னத்துரையும் காரசாரமாக சத்தமாக பேசிக்கொண்டிருந்தார்கள் என்றும், பின்பு அவர்கள் எங்களுக்கு முன்பாக போர்ட்டை எடுத்து கடலுக்கு சென்றார் என்றும், அவர்கள் போன சிறிது நேரத்தில் நாங்கள் கிளம்பி சென்றோம் என்றும், சுமார் 1 மணி நேர பிரயாணத்திற்கு பிறகு கிழக்கே சுமார் 2 ½ நாட்டிக்கல் மைலில் ஆங்காங்கே மீன்பிடிப்பவர்கள் வலையை போட ஆயத்தமானோம் என்றும், அந்தோணி சின்னத்துரையும், அவரது மகனான அந்தோணி மகராஜாவும் எங்களுக்கு முன்பாக கடலில் சுமார் 50 மீட்டர் துாரத்தில் இருவரும் சண்டை போட்டு கொண்டிருப்பது எங்களது டார்ச் லைட் வெளிச்சத்தில் தெரிந்தது என்றும், கடலின் காற்றின் அழுத்தத்தால் ஏற்பட்ட அலையால் எங்கள் போர்ட் மேலேயும், அவர்கள் போர்ட் கீழேயும் அதேபோல் அங்குள்ளவர்களின் போர்ட்டும் அவ்வாறே மேலேயும், கீழேயும் மாறி மாறி வந்து கொண்டிருந்தது என்றும், அவர்கள் சண்டைபோட்டுக்கொண்டிருந்தபோது அந்தோணி சின்னத்துரை போர்ட் இன்ஞ்ஜினை பிடித்தபோது அவரது மகனான 1ம் எதிரி அந்தோணி மகராஜா ஒரு கம்பால் அவரை பின்னந்தலையில் அடித்தார் என்றும், பின்னந்தலையில் அடிபட்டுதிரும்பியவரை மாறி மாறி தலையில் அடித்தார் என்றும், ஒரு சில அடிகள் அவர் மீது படாமல் போர்ட்டின் இடது, வலது பக்கத்தில் பட்டது என்றும், அதை நாங்கள் மூவரும் எங்களது போர்ட்டிலிருந்து பார்த்து கொண்டிருந்தோம் என்றும், அவர்களின் குடும்ப சண்டை என்பதால் நாங்கள் மீன்பிடிப்பதற்கு அந்த இடத்தை விட்டு தள்ளி சென்றுவிட்டோம் என்றும், மீன்பிடித்து முடித்து காலையில் கரைக்கு வரும்போதுதான் சின்னத்துரையை காணோம் என்ற தகவலை தெரிந்துகொண்டோம் என்றும், அதன்பின்பு தேடிப்பார்க்கும்போது ராமநாதபுரம் மாவட்டம், தெற்கு நரிப்பையூரில் கடற்கரையில் அந்தோணி சின்னத்துரையின் உடல் ஒதுங்கி அந்த பிரேதத்தை அரசுமருத்துவகல்லுாரி மருத்துவமனையில் பிரேத பரிசோதனை முடித்தவுடன்தான் அந்தோணி சின்னத்துரையை அவரது மகனான அந்தோணி மகராஜா அடித்து கடலில் தள்ளி கொலை செய்துள்ளார் என்று தெரிந்தது. எங்களுக்கு மனம் உறுத்தியதால் அதனை 12.07.2019 ஆம் தேதி நிலையம் ஆஜராகி தங்களிடம் மேற்படி விவரங்களை கூறினோம் என்று சொல்லிவிட்டு எதிரிகள் உறவினர்கள் என்பதாலும், அவர்களுடன் சமாதானம் பேசிமுடித்துவிட்டதாலும், அவர்களை காப்பாற்றுவதற்காக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றுசொன்னால் சரியல்ல.

குறுக்குவிசாரணை (எதிரிகள்தரப்பில் இல்லை என சொல்லப்பட்டது)

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District & Sessions Judge,
Thoothukudi.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.223/2020

Petitioner side witness for P.W.3

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. ஞானசேகர்** | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **16.04.2025.**

**A1 to A3 are present.**

<u>முதல்விசாரணை:–</u>

நான் சின்ன வயது முதல் தூத்துக்குடி மாவட்டம் பழையகாயல் காமராஜபுரத்தில் குடியிருந்து வந்தேன். தொழிலுக்காக 2019 ஆம் வருடம் தூத்துக்குடி மாவட்டம் வெள்ளப்பட்டியில் குடியிருந்து நான் கடல் தொழில் செய்து வந்தேன். அ.சா.2 பூர்ண சுரேஷை எனக்கு தெரியும். அவருடன்தான் அவரது போர்ட்டில் கடலுக்கு சென்று வருகிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். அவர்கள் எனது உறவினர்கள்தான். 2 வது எதிரி எனக்கு சித்தி, 1 வது எதிரி எனது சித்தியின் மகன். 3 வதுஎதிரி சேகர்மணி அவரை கடலில் பார்த்திருக்கிறேன். இவ்வழக்கில் கொலையுண்டு இறந்துபோன சின்னத்துரையை தெரியும். சின்னத்துரை எனக்கு சித்தப்பா ஆவார். சின்னத்துரை கொலை வழக்கு சம்மந்தமாக என்னதெரியும் என்று கேட்டால் எனக்கு ஒன்றும் தெரியாது. எனது சித்தப்பா மொத்தமாக கடலுக்கு போகும்போது இறந்துவிட்டதாக சொன்னார்கள். யாருடன் கடலுக்கு சென்றார் என்ற விவரம் தெரியாது. எங்களது போர்ட்டும் எங்களது சித்தப்பா போர்ட்டிற்கு அருகேதான் நிறுத்தி வைத்திருப்போம். நாங்கள் அன்று கடலுக்கு போகவில்லை. எனது சித்தப்பாவை அவரது மகன்கள் அடித்து கொன்றதை நான் நேரடியாக பார்த்தேனா என்றால் இல்லை. எனது சித்தப்பாவிற்கும், அவரது மகன்களுக்கும் என்ன பிரச்சனை என்ன முன்விரோதம் என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(இந்நிலையில் சாட்சி வாக்குமூலத்திற்கு மாறுபாடாக சாட்சியமளித்ததால், அரசு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி சாட்சி பிறழ் சாட்சியாக கருதபட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன்பேரில் அனுமதிக்கப்பட்டது.)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலீசார் விசாரணையின்போது, நான் வேலை பார்க்கும் போர்ட் வெள்ளப்பட்டி கடற்கரையில் மற்ற மீனவர்கள் போர்ட்டிற்கு அருகே நிப்பாட்டி வைப்பேன் என்றும்,

இரவு 10.00 மணியளவில் வெள்ளப்பட்டி கடற்கரையிலிருந்து மீன்பிடிக்க என்னுடன் எனது படகின் உரிமையாளர் அ.சா.2 பூர்ணசுரேஷ் மற்றும் தருவைகுளத்தை சேர்ந்த காசிநாடார் மகன் ஜோதி மணி ஆகிய நாங்கள் மூவரும் கடலுக்கு சென்று மீன்பிடிப்பதை வழக்கமாக வைத்துள்ளோம் என்றும், அதேபோல் 06.07.2019 அன்று அதிகாலை சுமார் 1.00 மணியளவில் இறந்துபோன அந்தோணி சின்னத்துரையின் போர்ட் அருகே நிப்பாட்டி வைத்திருந்த எனது போர்ட்டை எடுத்துக்கொண்டு கடலுக்குள் செல்ல நாங்கள் தயாராகி கொண்டிருந்தபோது இறந்துபோன அந்தோணி சின்னத்துரையும், அவரது மகன்களான 1ம்எதிரி அந்தோணி மகராஜா மற்றும் அந்தோணி மார்ட்டின் ஆகியோரும் ஆயத்தமாகி கொண்டிருந்தார்கள் என்றும், சிறிது நேரத்தில் அந்தோணி சின்னத்துரையின் இளைய மகன் அந்தோணி மார்ட்டின் போர்ட்டின் பின்பகுதியில் படுத்து தூங்கிவிட்டார் என்றும், அப்போது அந்தோணி மகராஜாவும் அந்தோணி சின்னத்துரையும் காரசாரமாக சத்தமாக பேசிக்கொண்டிருந்தார்கள் என்றும், பின்பு அவர்கள் எங்களுக்கு முன்பாக போர்ட்டை எடுத்து கடலுக்கு சென்றார் என்றும், அவர்கள் போன சிறிது நேரத்தில் நாங்கள் கிளம்பி சென்றோம் என்றும், சுமார் 1 மணி நேர பிரயாணத்திற்கு பிறகு கிழக்கே சுமார் 2 ½ நாட்டிக்கல் மைலில் ஆங்காங்கே மீன்பிடிப்பவர்கள் வலையை போட ஆயத்தமானோம் என்றும், அந்தோணி சின்னத்துரையும், அவரது மகனான அந்தோணி மகராஜாவும் எங்களுக்கு முன்பாக கடலில் சுமார் 50 மீட்டர் தூரத்தில் இருவரும் சண்டை போட்டு கொண்டிருப்பது எங்களது டார்ச் லைட் வெளிச்சத்தில் தெரிந்தது என்றும், கடலின் காற்றின் அழுத்தத்தால் ஏற்பட்ட அலையால் எங்கள் போர்ட் மேலேயும், அவர்கள் போர்ட் கீழேயும் அதேபோல் அங்குள்ளவர்களின் போர்ட்டும் அவ்வாறே மேலேயும், கீழேயும் மாறி மாறி வந்து கொண்டிருந்தது என்றும், அவர்கள் சண்டைபோட்டுக்கொண்டிருந்தபோது அந்தோணி சின்னத்துரை போர்ட் இன்ஞ்ஜினை பிடித்தபோது அவரது மகனான 1ம் எதிரி அந்தோணி மகராஜா ஒரு கம்பால் அவரை பின்னந்தலையில் அடித்தார் என்றும், பின்னந்தலையில் அடிபட்டுதிரும்பியவரை மாறி மாறி தலையில் அடித்தார் என்றும், ஒரு சில அடிகள் அவர் மீது படாமல் போர்ட்டின் இடது, வலது பக்கத்தில் பட்டது என்றும், அதை நாங்கள் மூவரும் எங்களது போர்ட்டிலிருந்து பார்த்து கொண்டிருந்தோம் என்றும், அவர்களின் குடும்ப சண்டை என்பதால் நாங்கள் மீன்பிடிப்பதற்கு அந்த இடத்தை விட்டு தள்ளி சென்றுவிட்டோம் என்றும், மீன்பிடித்து முடித்து காலையில் கரைக்கு வரும்போதுதான் சின்னத்துரையை காணோம் என்ற தகவலை தெரிந்துகொண்டோம் என்றும், அதன்பின்பு தேடிப்பார்க்கும்போது ராமநாதபுரம் மாவட்டம், தெற்கு நரிப்பையூரில் கடற்கரையில் அந்தோணி சின்னத்துரையின் உடல் ஒதுங்கி அந்த பிரேதத்தை அரசுமருத்துவகல்லூரி மருத்துவமனையில் பிரேத பரிசோதனை முடித்தவுடன்தான் அந்தோணி சின்னத்துரையை அவரது மகனான அந்தோணி மகராஜா அடித்து கடலில் தள்ளி கொலை செய்துள்ளார் என்று தெரிந்தது. எங்களுக்கு மனம் உறுத்தியதால் அதனை 12.07.2019 ஆம் தேதி நிலையம் ஆஜராகி தங்களிடம் மேற்படி விவரங்களை கூறினோம் என்று சொல்லிவிட்டு எதிரிகள் உறவினர்கள் என்பதாலும், அவர்களுடன் சமாதானம் பேசிமுடித்துவிட்டதாலும், அவர்களை காப்பாற்றுவதற்காக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றுசொன்னால் சரியல்ல.

குறுக்குவிசாரணை (எதிரிகள்தரப்பில் இல்லை என சொல்லப்பட்டது)

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District & Sessions Judge,
Thoothukudi.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.223/2020

Petitioner side witness for P.W.4

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. ஜோதிமணி | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **16.04.2025.**

**A1 to A3 are present.**

முதல்விசாரணை:–

நான் பிறந்தது முதல் துாத்துக்குடி மாவட்டம் தருவைகுளத்தில் குடியிருந்து வந்தேன். 2019 ஆம் வருடம் கடல் தொழிலுக்காக வெள்ளப்பட்டி வருவதே கிடையாது. அ.சா.2 பூர்ண சுரேஷை எனக்கு தெரியும். அவருடன்தான் அவரது போர்ட்டில் கடலுக்கு சென்று வருகிறேன் என்றால் இல்லை. ஆஜர் எதிரிகளில் 1,2 ஐ தெரியும். 3 ம் எதிரியை தெரியாது. 1 ம் எதிரி அத்தை மகன், 2 ம் எதிரி அத்தை, 3 வதுஎதிரி சேகர்மணியை எனக்குத்தெரியாது. இவ்வழக்கில் கொலையுண்டு இறந்துபோன சின்னத்துரையை தெரியும். சின்னத்துரை எனக்கு மாமா ஆவார். சின்னத்துரை கொலை வழக்கு சம்மந்தமாக என்னதெரியும் என்று கேட்டால் எனக்கு ஒன்றும் தெரியாது. எனது மாமா மொத்தமாக கடலுக்கு போகும்போது இறந்துவிட்டதாக சொன்னார்கள். யாருடன் கடலுக்கு சென்றார் என்ற விவரம் தெரியாது. எங்களது போர்ட்டும் எங்களது மாமா போர்ட்டிற்கு அருகேதான் நிறுத்தி வைத்திருப்போம் என்றால் இல்லை. நான் வெள்ளப்பட்டியில் கடலுக்கு போகவில்லை. எனது மாமாவை அவரது மகன்கள் அடித்து கொன்றதை நான் நேரடியாக பார்த்தேனா என்றால் இல்லை. எனது மாமாவிற்கும், அவரது மகன்களுக்கும் என்ன பிரச்சனை என்ன முன்விரோதம் என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(இந்நிலையில் சாட்சி வாக்குமூலத்திற்கு மாறுபாடாக சாட்சியமளித்ததால், அரசு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி சாட்சி பிறழ் சாட்சியாக கருதபட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன்பேரில் அனுமதிக்கப்பட்டது.)**

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

போலீசார் விசாரணையின்போது, நான் வேலை பார்க்கும் போர்ட் வெள்ளப்பட்டி கடற்கரையில் மற்ற மீனவர்கள் போர்ட்டிற்கு அருகே நிப்பாட்டி வைப்பேன் என்றும், இரவு 10.00 மணியளவில் வெள்ளப்பட்டி கடற்கரையிலிருந்து மீன்பிடிக்க என்னுடன் எனது படகின் உரிமையாளர் அ.சா.2 பூர்ணசுரேஷ் மற்றும் பழையகாயலை சேர்ந்த ஞானசேகர் ஆகிய நாங்கள் மூவரும் கடலுக்கு சென்று மீன்பிடிப்பதை வழக்கமாக வைத்துள்ளோம் என்றும், அதேபோல் 06.07.2019 அன்று அதிகாலை சுமார் 1.00 மணியளவில் இறந்துபோன அந்தோணி சின்னத்துரையின் போர்ட் அருகே நிப்பாட்டி வைத்திருந்த எனது போர்ட்டை எடுத்துக்கொண்டு கடலுக்குள் செல்ல நாங்கள் தயாராகி கொண்டிருந்தபோது இறந்துபோன அந்தோணி சின்னத்துரையும், அவரது மகன்களான 1ம்எதிரி அந்தோணி மகராஜா மற்றும் அந்தோணி மார்ட்டின் ஆகியோரும் ஆயத்தமாகி கொண்டிருந்தார்கள் என்றும், சிறிது நேரத்தில் அந்தோணி சின்னத்துரையின் இளைய மகன் அந்தோணி மார்ட்டின் போர்ட்டின் பின்பகுதியில் படுத்து தூங்கிவிட்டார் என்றும், அப்போது அந்தோணி மகராஜாவும் அந்தோணி சின்னத்துரையும் காரசாரமாக சத்தமாக பேசிக்கொண்டிருந்தார்கள் என்றும், பின்பு அவர்கள் எங்களுக்கு முன்பாக போர்ட்டை எடுத்து கடலுக்கு சென்றார் என்றும், அவர்கள் போன சிறிது நேரத்தில் நாங்கள் கிளம்பி சென்றோம் என்றும், சுமார் 1 மணி நேர பிரயாணத்திற்கு பிறகு கிழக்கே சுமார் 2 ½ நாட்டிக்கல் மைலில் ஆங்காங்கே மீன்பிடிப்பவர்கள் வலையை போட ஆயத்தமானோம் என்றும், அந்தோணி சின்னத்துரையும், அவரது மகனான அந்தோணி மகராஜாவும் எங்களுக்கு முன்பாக கடலில் சுமார் 50 மீட்டர் தூரத்தில் இருவரும் சண்டை போட்டு கொண்டிருப்பது எங்களது டார்ச் லைட் வெளிச்சத்தில் தெரிந்தது என்றும், கடலின் காற்றின் அழுத்தத்தால் ஏற்பட்ட அலையால் எங்கள் போர்ட் மேலேயும், அவர்கள் போர்ட் கீழேயும் அதேபோல் அங்குள்ளவர்களின் போர்ட்டும் அவ்வாறே மேலேயும், கீழேயும் மாறி மாறி வந்து கொண்டிருந்தது என்றும், அவர்கள் சண்டைபோட்டுக்கொண்டிருந்தபோது அந்தோணி சின்னத்துரை போர்ட் இன்ஞ்ஜினை பிடித்தபோது அவரது மகனான 1ம் எதிரி அந்தோணி மகராஜா ஒரு கம்பால் அவரை பின்னந்தலையில் அடித்தார் என்றும், பின்னந்தலையில் அடிபட்டுதிரும்பியவரை மாறி மாறி தலையில் அடித்தார் என்றும், ஒரு சில அடிகள் அவர் மீது படாமல் போர்ட்டின் இடது, வலது பக்கத்தில் பட்டது என்றும், அதை நாங்கள் மூவரும் எங்களது போர்ட்டிலிருந்து பார்த்து கொண்டிருந்தோம் என்றும், அவர்களின் குடும்ப சண்டை என்பதால் நாங்கள் மீன்பிடிப்பதற்கு அந்த இடத்தை விட்டு தள்ளி சென்றுவிட்டோம் என்றும், மீன்பிடித்து முடித்து காலையில் கரைக்கு வரும்போதுதான் சின்னத்துரையை காணோம் என்ற தகவலை தெரிந்துகொண்டோம் என்றும், அதன்பின்பு தேடிப்பார்க்கும்போது ராமநாதபுரம் மாவட்டம், தெற்கு நரிப்பையூரில் கடற்கரையில் அந்தோணி சின்னத்துரையின் உடல் ஒதுங்கி அந்த பிரேதத்தை அரசுமருத்துவகல்லூரி மருத்துவமனையில் பிரேத பரிசோதனை முடித்தவுடன்தான் அந்தோணி சின்னத்துரையை அவரது மகனான அந்தோணி மகராஜா அடித்து கடலில் தள்ளி கொலை செய்துள்ளார் என்று தெரிந்தது. எங்களுக்கு மனம் உறுத்தியதால் அதனை 12.07.2019 ஆம் தேதி நிலையம் ஆஜராகி தங்களிடம் மேற்படி விவரங்களை கூறினோம் என்று சொல்லிவிட்டு எதிரிகள் உறவினர்கள் என்பதாலும், அவர்களுடன் சமாதானம் பேசிமுடித்துவிட்டதாலும், அவர்களை காப்பாற்றுவதற்காக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றுசொன்னால் சரியல்ல.

குறுக்குவிசாரணை (எதிரிகள்தரப்பில் இல்லை என சொல்லப்பட்டது)

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.